**2026.07.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. 2026 – 2030 ஆண்டுக்கான பணத் தூய்தாக்கல் தடுப்பு, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் மற்றும் கூட்டுப்படுகொலை ஆயுத உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிதியிடலைத் தடுத்தல் தொடர்பான தேசிய கொள்கை**

பணத் தூய்தாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் கூட்டுப்படுகொலை ஆயுத உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிதியிடல் போன்ற குற்றங்கள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு மற்றும் உலகளாவிய நிதி முறைமைக்கு மோசமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அதிகரித்துவரும் தொழிநுட்ப வளர்ச்சியுடன் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மிகவும் சிக்கலாக மாறியுள்ளதுடன், குற்றவாளிகள் குற்றச் செயல்களால் ஈட்டுகின்ற வருமபடிகளை மறைத்து வைப்பதற்கான முறைகளை அடையாளங் காணல் மற்றும் அவற்றை தடுத்தல் சவால்மிக்க செயலாக மாறியுள்ளது. அதனால், நிதிசார் குற்றங்கள் தொடர்பாக செயலாற்றுகின்ற நாடுகளுக்கிடையிலான கொள்கை வகுப்பு நிறுவனமான, நிதிச் செயலாற்றுகை செயலணி (Financial Action Task force) இனால் விதிக்கப்பட்டுள்ள தரநிர்ணயங்களுக்கமைய இலங்கை மத்திய வங்கியின் நிதிப் புலனாய்வுப் பிரிவினால் நிதிக் குற்றங்கள் தொடர்பாக இலங்கையின் மூன்றாவது தேசிய இடர் மதிப்பீடு 2024/25 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த தேசிய இடரை மதிப்பீடு செய்யும் போது அடையாளங் காணப்பட்டுள்ள இடரை முகாமைத்துவப்படுத்துவதற்காக ''பணத் தூய்தாக்கல் தடுப்பு, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் மற்றும் கூட்டுப்படுகொலை ஆயுத உற்பத்தியை அதிகரிப்பதற்கு நிதியிடலைத் தடுத்தல் தேசிய கொள்கை 2026- 2030'' தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த தேசிய கொள்கையை 2026 – 2030 காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. கூரை மீது சூரிய மின்சக்தியை இணைத்தல் மற்றும் நிகர அளவீடு தொடர்பான கருத்திட்டத்தை அமுல்படுத்தல்**

சுயாதீன மின்னுற்பத்தியாளர்களுக்கு சூரிய மின்சக்தியைப் பயனுறு வகையில் பயன்படுத்தல் மற்றும் விநியோகிப்பதற்காக முறைசார்ந்த தீர்வுகளை வழங்கி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்திக் கருத்திட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய கருத்திட்டமாக ''கூரை மீது சூரிய மின்சக்தியை இணைத்தல் மற்றும் நிகர அளவீடு தொடர்பான கருத்திட்டம்'' அடையாளங் காணப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டத்திற்கான நிதியிடலுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய ஏற்புடைய முகவரகங்களுடன் பேச்சுவார்த்தைகளுக்கு 2025.11.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த தீர்மானத்திற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஒருங்கிணைந்த கடன் பொறிமுறைக்கான ஜப்பான் நிதியத்துடன் உரிய கடன்கள் மற்றும் நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்கான கலந்துரையாடல் தற்போது பூர்த்தியடைந்துள்ளது. இக்கலந்துரையாடல்களில் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாடுகளின் அடிப்படையிலும் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சலுகை பொது மூலதன வளங்களில் 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள், ஐரோப்பிய ஒன்றியத்தின் 15.4 மில்லியன் யூரோக்கள் நன்கொடையும், மற்றும் ஒருங்கிணைந்த கடன் பொறிமுறைக்கான ஜப்பான் நிதியத்தின் 5.5



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாகவும் பெற்றுக் கொள்வதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் கடன் மற்றும் கொடை ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. வலுசக்தி சிக்கனமான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான பங்காண்மை வேலைத்திட்டம்**

ஜேர்மன் அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் காணப்படுகின்ற தொழிநுட்ப ஒத்தழைப்புக்கள் தொடர்பான அடிப்படை ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்படும் நிதிக் கொடைகளின் கீழ் எமது நாட்டின் வலுசக்தி சிக்கனமான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான பங்காண்மை வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டம் ஜேர்மன் அரசின் GIZ நிறுவனம் (Deutsche Gesellschaft Fur Internationale Zusammenarbeit GmbH) இனால் அமுல்படுத்துவதற்கும், வலுசக்தி அமைச்சு மற்றும் நிலைபெறுதகு வலுசக்தி அதிகாரசபையால் கண்காணிக்கப்படவுள்ளது. வலுசக்தியை சிக்கனமாகப் பயன்படுத்தல் மற்றும் பல்வேறு காலநிலைகளுக்கு தாங்குதிறன் கொண்ட கட்டிடங்களை பேணிச் செல்லல் தொடர்பான கொள்கைகள், நிறுவனப் பணிச்சட்டகம் மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களை வழங்குவதற்காக இலங்கைக்கு ஒத்துழைப்பதே இவ்வேலைத்திட்டத்தின் நோக்கமாகும். அதற்கமைய, 924,063 யூரோ (314 மில்லியன் இலங்கை ரூபாய்கள்) மொத்த நிதிக் கொடையின் கீழ் இவ்வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மற்றும் GIZ நிறுவனத்தின்உள்நாட்டு முகவரகத்துக்கும் இடையில் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. தேசிய கால்நடை வளங்கள் கொள்கை**

2006 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு தற்போது நடைமுறையிலுள்ள கால்நடை வளங்கள் கொள்கை, உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் இடம்பெற்றுள்ள சமூக மற்றும் பொருளாதார நிலைமாற்றங்களால் உணவுப் பாதுகாப்பு மற்றும் கால்நடை வளங்கள் துறையின் அபிவிருத்தி தொடர்பாக மேலெழுந்துள்ள சவால்களைக் கருத்தில் கொண்டு காலத்தோடு தழுவியதாக மேம்படுத்த வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, உள்நாட்டு நிபுணத்துவர்களின் மதியுரைகள் மற்றும் அறிவைப் பெற்றுக்கொண்டு தனியார் துறையை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி, சந்தைப்படுத்தலை இலக்காகக் கொண்ட போட்டித்தன்மையான உற்பத்தி, பேண்தகு மற்றும் சுற்றாடல் நேய அபிவிருத்தி, சிறு விவசாயிகள் மற்றும் கிராமிய வாழ்வாதாரங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கல், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தின் அடிப்படையிலான அபிவிருத்தி போன்ற துறைகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ள தேசிய கால்நடை வளங்கள் கொள்கையை அமுல்படுத்துவதற்கு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பிம்ஸ்டெக் (BIMSTEC) அமைப்பின் நான்காவது விவசாய அமைச்சர்களின் கூட்டம் மற்றும் உயர் அதிகாரிகளின் கூட்டத்தை இலங்கையில் நடாத்துதல்**

பல்துறைசார் தொழிநுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்களுக்கான வங்காள விரிகுடா தொடக்க முயற்சி (BIMSTEC) என்பது பங்களாதேசம், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து போன்ற 07 தெற்காசிய பிராந்தியம் மற்றும் கிழக்காசிய பிராந்திய நாடுகளுடன் நிறுவப்பட்டுள்ள அமைப்பாகும். வங்காள விரிகுடாவுக்கு அண்மையிலுள்ள நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கமாக அமைகின்றது. விவசாய பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளில் தொழில்களுக்கான ஆரம்ப மூலமாக இருத்தல் மற்றும்

பேண்தகு அபிவிருத்தி மற்றும் பிராந்திய ரீதியான உணவுப் பாதுகாப்புக்கான விவசாயம் மற்றும் அதுசார்ந்த துறைகளின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு, பிம்ஸ்டெக் ஒத்துழைப்பின் ஒரு துறையாக விவசாயம் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் பிம்ஸ்டெக் விவசாய அமைச்சர்களின் கூட்டம் மற்றும் உயர் அதிகாரிகளின் கூட்டம் 02 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடாத்தப்படுவதுடன், அதன் நான்காவது கூட்டத்தை இலங்கையில் நடாத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, 2027 மார்ச் 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் நான்காவது பிம்ஸ்டெக் விவசாய அமைச்சர்களின் கூட்டம் மற்றும் உயர் அதிகாரிகளின் கூட்டத்தை நடாத்துவதற்கான உபசரிப்புக்களை மேற்கொள்வதற்காக கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. வரக்காபொல உப வீதியின் நிர்மாணப் பணிகளில் எஞ்சியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்கல்

தேசிய பெருந்தெருக்களை விரிவாக்கம் செய்தல் மற்றும் மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி வரக்காபொல உப வீதியின் (0+000 கிலோமீற்றர் தொடக்கம் 2+320 வரை) நிர்மாணப் பணிகளில் எஞ்சியுள்ள வேலைகளைப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களை தேர்ந்தெடுப்பதற்காக தேசிய போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், ஆறு (06) விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Maga Engineering (Pvt) Ltd இற்கு 4.99 பில்லியன் ரூபாய் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறும் விமானப் பயணிகள் தங்கியிருக்கும் முனையத்தின் அளவை விரிவுபடுத்தல் வேலைத்திட்டம்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறும் விமானப் பயணிகள் தரித்து நிற்கும் முனையத்தின் இடவசதிகளை விரிவுபடுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ் 36 சோதனை செய்யும் கருமபீடங்கள் மற்றும் பயணிகள் முனையத்திலிருந்து விமானம் வரைக்கும் செல்கின்ற ஆறு (06) வாயில்களுக்கான புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான பெறுகைச் செயன்முறையை ஆரம்பிப்பதற்காக 2025.02.09 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்கு மூன்று (03) விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதப்புரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Maga Engineering (Pvt) Ltd இற்கு 7.26 மில்லியன் அமெரிக்க டொலர் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) மற்றும் 3.77 பில்லியன் இலங்கை ரூபாய்கள் தொகைக்கு (பெறுமதி சேர் வரியில்லாமல்) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு, தொழிநுட்பவியல் நிறுவனம் மற்றும் உருஹுணு பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்த கருத்திட்டமாக மத்தியமயப்படுத்தப்பட்ட உயிர்மக் கழிவுகளற்ற கறுவாப்பட்டை பதனிடல் நிலையத்தை அமைத்தல்**

மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் சிறிய அளவிலான செய்கையாளர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்டு செல்கின்ற இலங்கையின் கறுவாப்பட்டை கைத்தொழில், அதிக பதினிடல் செலவு, சுகாதாரநல தரநியமங்கள் மற்றும் உயிர்மக் கழிவுகளைக் குறைந்தளவு பயன்படுத்தல் போன்ற பொதுவான சவால்களுக்கு தொடர்ச்சியாக முகங்கொடுத்து வருகின்றனர். இத்தடைகளுக்கான தீர்வாக தொழிநுட்பவியல் நிறுவனத்தால் உருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு இணைந்து நவீன மத்தியமயப்படுத்தப்பட்ட உயிர்மக் கழிவுகளற்ற கறுவாப்பட்டை பதனிடல் நிலையத்தை (Centralized Zero – waste Biomass Cinnamon Processing Centre) உருஹுணு பல்கலைக்கழகத்தின் மாபலான விவசாயக் கல்விப்பீடத்தின் காணி அமைந்துள்ள வளாகத்தில் நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த கருத்திட்டம் 27 மாதங்களில் நான்கு கட்டங்களாக அபிவிருத்திக் கருத்திட்டமாக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சு, தொழிநுட்பவியல் நிறுவனம் மற்றும் உருஹுணு பல்கலைக்கழகம் ஒருங்கிணைந்த கருத்திட்டமாக விவசாயக் கல்விப்பீடத்தின் காணி அமைந்துள்ள வளாகத்தில் முன்மொழியப்பட்ட மத்தியமயப்படுத்தப்பட்ட உயிர்மக் கழிவுகளற்ற கறுவாப்பட்டை பதனிடல் நிலையத்தை அமைப்பதற்காக விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றிய திரு. ஏ.விஜேசிங்ஹ அவர்கள் 2026.07.09 ஆம் திகதி தொடக்கம் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளமையால், இப்பதவி வெற்றிடமாகவுள்ளது. தற்போது அத்திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றுகின்ற இலங்கை பொறியியல் சேவையின் விசேடதர அதிகாரியான பொறியியலாளர் திரு. எஸ்.என்.பீ.எம். பத்மசிறி அவர்களை அரச தொழிற்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிப்பதற்காக வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**